# நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை

(*2019* ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி தொடக்கம் ஜூன்*30* ஆம் திகதி வரை)

1. **மகாணங்களின் அடுத்துவரும் ஆண்டுக்குரிய மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத் தேவைகள் தொடர்பான பாதீட்டு வழிகாட்டிகளை வழங்குதல்**

நிதி ஆணைக்குழுவனது மாகாண நிர்வாகத்திற்கு அவர்களின் மூலதன மற்றும் மீண்டெழும் பாதீட்டு தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்களை ஒவ்வொரு வருடமும் வழங்குகிறது. 2020 ஆம் ஆண்டுக்கான விரிவான தேவை மதிப்பீடு வழிகாட்டல்கள் அவசியமான இணைப்புக்களுடன் தயாரிக்கப்பட்டு அனைத்து மகாணசபை பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்விரிவான வழிகட்டல்கள் மாகாண தேவைமதிபீடுகளை செயத்திறன்மிக்கதாக மேற்கொண்டு நிதி ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கப்படகூடிய மாதிரி படிவங்களை உள்ளடக்கியிருந்தது.

அனைத்து மாகாணங்களிடமிருந்தும் 2020 நிதியாண்டுக்கான மகாணங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவீன மதிப்பீட்டு தேவைகளின் பூரணப்படுதப்பட்ட படிவங்கள் நிதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்று மதிப்பீட்டு வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது . ஐந்து மகாணசபைகள் ஜூன் மாத இறுதியில் மூலதன மதிப்பீட்டு தேவைதேவைகளை சமர்பித்துள்ளதுடன் ஏனையவை கிடைக்கபெற்றவண்ணமுள்ளன. ஆகஸ்ட் மாத இறுதியளவில் பரிந்துரையை இறுதிசெய்யும் வகையில் தேவை மதீப்பீடானது ஆகஸ்ட் மாதத்தில் பூர்த்தி செய்யப்படும்.

2. **2019 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி திட்டங்களை பரிசீலனை செய்தல்**

ஒன்பது மாகாண சபைகளிடமிருந்தும் வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டங்கள் நிதி ஆணைக்குழுவிற்கு கிடைக்கபெற்றது. இத் திட்டங்கள் மிக கவனமாக நிதி ஆணைக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. நிதி ஆணைகுழுவின் தலைவர், அங்கத்தவர்கள், செயலாளர், மற்றும் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் அடங்கலான குழுவொன்று, மேல், வட, மத்திய , சபரகமுவ, கிழக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மகாணங்களின் மாகாண அபிவிருத்தி திட்டங்கள், நடைமுறை திட்டங்ள் மற்றும் நிறைவடைந்த திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு விஜயம் மேற்கொண்டனர். பிரதம செயலாளர்கள், அனைத்து மாகாண அமைச்சு செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இந்த மீளாய்வு கூட்டத்தில் பங்குபற்றினர்.

2019 ஆம் ஆண்டுக்கான ஒன்பது மாகாண சபைகளினதும் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களானது ஆய்வு செய்யப்பாட்டு மீளாய்வு கூட்டத்தின் கலந்துரையாடல்களின் பிரகாரம் சில திருத்தங்களை மேற்கொண்டு அவற்றினை அமுல்படுதுவதற்கு நிதி ஆணைக்குழு தனது இணக்கப்பாட்டினை வழங்கியுள்ளது .

3. **மகாணசபைகளுக்கான குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கீடு**

மீண்டெழும் செலவீன பாதீட்டின் கீழ் குறைநிரப்பு ஒதுகீடுகளுக்கான கோரிக்கைகள் மகாணசபைகளிடமிருந்து நிதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றது. 25.06.2019 வரையான எட்டு கோரிக்கைகளை ஆணைக்குழுவானது பரிசீலனை செய்து தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. மேலும் மூன்று கோரிக்கைகலானது பரிந்துரை செய்வதற்காக அந்தந்த மாகாணசபைகளிடமிருந்து விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

4. **நிதி ஆணைக் குழுவின் சட்டவரைபு**

நிதி ஆணைக்குழுவின் சட்ட வரைபு மாதிரி சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் சட்ட வரைஞர் திணைக்களதுடனும் பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெற்றன. சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கபெற்ற அறிவுறுத்தல்களுக்கமைவாக நிதி ஆணைக்குழுவில் இணைக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களின் பட்டியலிடப்பட்ட பட்டியல் மற்றும் திருத்தப்பட்ட சட்டவரைபும் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டது. சட்டவரைபு மாதிரி விரைவில் சமர்பிக்கப்படவேண்டும் என்பதால் சட்டமா அதிபர் திணைக்களத்துடனான கலந்துரையாடல் விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5. நிதி ஆணைக்குழுவின் தரவு தளம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமை**

மீண்டெழும் செலவீனதிற்கான தரவு தளம் செயல்முறையின் முதல் படி ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டு அதன் முன்மதிரி மென்பொருள் அபிவிருத்தி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு நிதி ஆணைக்குழுவின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளுக்காக முன்வைக்கப்பட்டது. "தீக்க்ஷன" மென்பொருள் அபிவிருத்தி நிறுவனத்தினர் இந்த உருவாக்கம் பற்றிய ஒரு விளக்கக்காட்சியை 2019 மே மாதம் 2 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவின் அனைத்து நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கும் முன்வைத்தனர். ஆணைக்குழுவானது 2020 ஆண்டு மதிப்பீட்டின் மாகாணங்களின் மீண்டெழும் செலவீன பதீட்டு மதிப்பீடுகளில் மென்பொருள் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் இச் செயல்முறையை இணைத்துக்கொண்டது.

.

**6. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை – 2018**

2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கயுடன் அமைச்சரவை பத்திரத்திற்கான மூன்று இணைப்புக்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி ஜனாதிபதி செயலகதிற்கு கையளிக்கப்பட்டது.

- 2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை
- 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள்.
- நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகையை அதிகரிப்பதற்காக இணைத்து கொள்ளப்படவேண்டிய நடுத்தர கால அளவீடுகளின் சுருக்கம்

**7. நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை**

நிதி ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டிகான செயலற்றுகை அறிக்கைகளை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரையான (காலாண்டிற்கான செயலற்றுகை அறிக்கை) மற்றும் ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான (வருடாந்த செயலற்றுகை) அறிக்கைகள் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி மற்றும் மே 27 ஆம் திகதிகளில் பாராளுமன்றதிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாண்டின் முதற் காலாண்டுக்கான முதற் பெறுபேற்று அறிக்கை 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**8. மூலோபாய திட்டத்தின் மீளாய்வு**

நிதி ஆணைக்குழுவின் மூலோபாய திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு மீள் உருவாக்கப்பட்டது. இது சம்பந்தமான தொடர் கலந்துரையாடல்கள் ஆணைக்குழு அலுவலர்களுடன் நடத்தப்பட்டதுடன் ஆணைக்குழு கூட்டத்திற்கும் சமர்பிக்கப்பட்டது.

**9. மாகாண கணக்காய்வு அறிக்கைகள் சம்பந்தமான சுட்டிக்காட்டல்களை/சிறப்பம்சங்களை தயாரித்தல்**

காலாண்டு பகுதிகளில் நிதி ஆணைக்குழுவானது, வட, ஊவா மற்றும் மேல் மகாண சபைகளின் 2017 ஆம் நிதி ஆண்டிடற்கான கணக்காய்வு அறிக்கைகளை தேசிய கணகாய்வு அலுவலகத்திடமிருந்து பெற்றுக்ககொண்டது. இவ்வறிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு சுட்டிகாட்டல்களின் அவதானிப்புகள் ஆணைக்குழு கூட்டத்தில் அட்டவணப்படுதப்பட்டதுடன் அதன்பின் கணகாய்வாளர் நாயகம், மாகாண ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு தொடர் நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

**10. மனிதவள கொள்கை**

பொதுநிர்வாக சுற்றறிக்கை இல:02/2018 யின் வழிகாட்டல்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் நிதி ஆணைக்குழுவின் அலுவலர்களின் திறன்,

மனோபாவம் மற்றும் செயலாற்றுகையை மேம்படுதுவதற்காக நிர்வாகப் பிரிவினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இது திருத்தப்பட்ட மூலோபாய திட்டத்தில் பரிசீலனை செய்யப்யப்பட்டது.

**11. வேலை ஆய்வு**

கடந்த காலாண்டு அறிக்கையில் குறிப்பிட்டதை போன்று, ஆணைக்குழுவானது செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஆணைக்குழுவின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் ஒரு வேலை ஆய்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இது சம்பந்தமாக ஆணைகுழுவானது ஆசியா பவுண்டேஷனுடன் சில சந்திப்புக்களை மேற்கொண்டது. இவ் வேலை ஆய்வானது மூன்றாம் காலாண்டில் ஆரம்பிக்கப்படும் என எதிபார்க்கப்படுகிறது.

**12. ஐந்து மாகாணங்களின் நடுதரகால நிலையான அபிவிருத்தி திட்டங்களை நிபுணர் குழுவுக்கு முன்வைத்தல்**

யு.என்.டி.பி(UNDP).இன் தொழில்நுட்ப உதவியுடன் ஊவா, சபரகமுவ, மத்திய, வட மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளால் தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு நடுதரகால நிலையான அபிவிருத்தி திட்டங்கள் நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், நிலையான அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம், தேசிய பாதீடு, தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்கள பிரதிநிதிகள், அந்தந்த மாகாணங்களின் பிரதி பிரதம செயலாளர்கள்(திட்டமிடல்) மற்றும் யுஎன்டிபி பிரதிநிதிகள் அடங்கலான குழுவுக்கு முன்வைக்கப்பட்டது.

திட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்காக நிபுணர் குழுவிலிருந்து பெறுமதியான கருத்துகளைப் பெறுவதற்கும் அவற்றை அந்த மாகாணங்களின் ஒட்டுமொத்த நடுத்தரகாலத் திட்டங்களாக அங்கீகரிப்பதற்கும் ஒரு கலந்துரையாடலை இது அமைத்தது . இந்தத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான ஆலோசகர்களாக பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் மற்றும் மாகாணங்களின் மூத்த பணியாளர்கள் இருந்தனர்.

**13. சமமான பிராந்திய அபிவிருத்தி குறித்த கற்கைக்கான விதிமுறை குறிப்புக்களை உருவாக்குதல்**

நிதி ஆணைக்குழுவில் 2019 மார்ச் 8 ஆம் திகதி சமமான பிராந்திய அபிவிருத்தி குறித்து தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் , மத்திய வங்கி, தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதிக் கொள்கைத் திணைக்களம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து குறிப்பு விதிமுறைகள் (TOR) செயல்பாட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்டு மற்றும் வழிநடத்தல் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட வழிநடத்தல் குழு, நிதி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் செயலாளர், தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம், தேசிய திட்டமிடல், நிதிக் கொள்கை, தேசிய பாதீடு மற்றும் மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பிராந்திய மேம்பாட்டுத் துறை திணைக்களங்களின் பிரதிநிதிகளை கொண்டுள்ளது .

**14. மதிய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி பணிப்பாளருடனான கலந்துரையாடல்**

மதிய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்துடன் கிராமிய கடன் வசதிகள் குறித்து 2019 மே 27 அன்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இக் கலந்துரையடலில் நிதி ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் மற்றும் உதவி பணிப்பாளர்கள் பங்கேற்றனர்.

**15. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்துடனான இணைந்த ஆய்வு கற்கைகள்**

நிதி ஆணைக்குழு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து 2019 ஆம் ஆண்டிற்கான இரண்டு கூட்டு ஆராய்ச்சி கற்கைகளை ஆரம்பித்துள்ளது. இந்த கற்கைகளில் இருந்து பொருத்தமான ஆராய்ச்சியைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு சுயாதீன மதிப்பீட்டுக் குழு கூட்டம் 2019 ஜூன் 24 அன்று நடைபெற்றது.

**16. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம்**

இரண்டாம் காலண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் ஜூன் 24 ஆம் திகதி இடம்பெற்றதுடன், பொருத்தமான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**17. உள்ளக கணக்காய்வு சாசனம்**

நிதி ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சாசனம் நிதி ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு பிரிவு பின்பற்ற வேண்டிய பணி, நோக்கம், அதிகாரம், சுதந்திரம் மற்றும் பொறுப்பு, நெறிமுறைகளை வழங்குகிறது.

**18. அலுவலர்களின் திறன் விருத்தி**

**விருந்தினர் விரிவுரைகள்**

பின்வரும் விருந்தினர்கள் நிதி ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு விரிவுரைகளை மேற்கொண்டனர்.

| **பெயர்** | **தலைப்பு** | **திகதி** |
|---|---|---|
| பேராசிரியர். அஜித் டி அல்விஸ் | ஆக்கச்சின்தனை | 2019.05.24 |
| டாக்டர்.தினேஷ் ஆட்டிகள,<br>டாக்டர் .சாந்தா அமரசிங்க<br>திரு. வீரகொட-மொரடுவ பல்கலைக்கழகம் | பொருள் அறிவியல் மற்றும் பொருளாதாரம் | 2019.05.27 |
| டாக்டர்.அஜித் ரோகன கொலோனே | வெற்றி | 2019.06.25 |

**அலுவலகர்களின் மனிதவள அபிவிருத்தி (உள்ளூர் பயிற்ச்சி)**

| **பெயர்** | **தலைப்பு** | **திகதி** |
|---|---|---|
| திருமதி டபிள்யூ.டி.ஐ. டி .இரேஷிகா | களஞ்சியம் மற்றும் இருப்பு முகாமைத்துவம் | 2019.04.25-2019.04.26 |
| திருமதி விஜிதா அபேவிக்ரம | களஞ்சியம் மற்றும் இருப்பு முகாமைத்துவம் | 2019.04.25-2019.04.26 |
| திருமதி எஸ்.என்.சஞ்சீவனி | நிறைவேற்று அதிகாரிகளுக்கான கொள்முதல் நடைமுறைகள் | 2019.06.06/ 2019.06.13 / 2019.06.20 |

ஏற்கனவே அறிவித்தபடி, பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 02/2018 க்கு ஏற்ப மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**19. கருத்தரங்குகள் மற்றும் பயிற்ச்சி பட்டறைகளில் பங்குபற்றல் /கலந்துகொள்ளல்**

நிதி ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் சில சிரேஷ்ட்ட உத்தியோகத்தர்கள் பின்வரும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்ச்சி பட்டறைகளில் கலந்து கொண்டனர்

- **உலக வங்கியின் நிதியுதவியுடனான பொது கல்வி நவீனமயமாக்கல் திட்டம்**

2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (GEM) உலக வங்கியால் 100 மில்லியன் அமெரிக்க டாலர் மானியத்துடன் நிதியளிக்கப்படுகிறது, இதன் நோக்கமானது பொதுக் கல்வி முறையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சேவையை வலுப்படுத்துதல் மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கு ஏற்ப இலங்கையில் நடுத்தர வருமானம் மற்றும் உயர் வருமான கல்வி முறைகளில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி முறையை நவீனமயமாக்குதலாகும். திட்ட அமுலாக்கல் காலம் 2018-2024 ஆகும் .

முதன்மை திட்ட கூறுகள், தரத்தை மேம்படுத்துதல் மற்றும் முதன்மை மற்றும் இடைநிலைக் கல்வி மற்றும் திட்ட செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப சேவையினை வலுப்படுத்துகின்றன.

திட்டத்தை செயல்படுத்த 48 உறுப்பினர்களைக் கொண்ட வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களில் நிதி ஆணைக்குழு தலைவரும் ஒருவராவார். வழிநடத்தல் குழு கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

- **நிதி ஆணைக்குழுவின் சட்ட வரைபு சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களதுடனான ஒரு கலந்துரையாடல்**

நிதி ஆணைக்குழுவின் சட்ட வரைபு சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களதுடன் ஆணைக்குழுவின் தலைவர், உறுபினர்கள், செயலாளர் மற்றும் ஏனய உத்தியோகத்தர்களுடன் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் சட்டவரைபின் முக்கிய அம்சங்களை வகை படுத்தவும் அவற்றை சட்டமா அதிபர் திணைக்களதிற்கு, அவர்களின் கவனத்திற்கு அனுப்பவும் முடிவு செய்யப்பட்டது.

- **புதிய மகாண வீதி அபிவிருத்தி திட்டம்**

இத்திட்டத்தின் முக்கியநோக்கமானது வீதி வலையமைப்பின் அணுகல் மற்றும் சொத்து முகாமைத்துவதை அதிகரிப்பதுவும் வீதி திணைக்கள முறைமைகள் மற்றும் செயல்பாடுகளை வலுப்படுத்துவதுமாகும். இந்த திட்டத்தில் இரண்டு முக்கிய கூறுகள் உள்ளன, அதாவது மாகாண வீதி திட்ட நிதியீட்டம் மற்றும் சொத்து முகாமைத்துவம், வீதி பாதுகாப்பு மற்றும் நிறுவன வலுப்படுத்தல் என்பனவாகும். மாகாண வீதி திட்டத்தின் நிதியுதவியின் கீழ், ஒன்பது மாகாணங்களில் சுமார் 500 கி.மீ முன்னுரிமை மாகாண வீதிகளின் நிர்மாணம் மற்றும் / புனர் நிர்மாணம் / மேம்படுத்தல் ஆகியன 5 ஆண்டு பராமரிப்பு காலத்துடன் மேற்கொள்ளப்படும். சொத்து முகமைதுவமானது வீதி பாதுகாப்பு மற்றும் நிறுவன வலுப்படுத்தும் கூறு, சொத்து முகாமைத்துவ கட்டமைப்பை மேம்படுத்துதல், விவசாயம் உணவு மதிப்பு சங்கிலிகள் மற்றும் நிறுவன திறன் ஆகியவற்றிற்கான இணைப்புக்களை நிறுவுதல் ஆகியவற்றை கொண்டுள்ளது.

- **இலங்கையில் குழந்தை பராமரிப்பு மையங்களுக்கான தேசிய வழிகாட்டல்களை அமுல்படுதுவதற்கான கலந்துரையாடல் .**

இவ் விடயம் சம்பந்தமாக 2019 ஆண்டு மே 16 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மகளிர் சிறுவர் விவகார அமைச்சும் இணைந்து தயாரித்த வழிகாட்டல்களை பரிசீலனை செய்யும் முகமாக நடைபெற்றது .இதில் அனைத்து மாகாண ஆணையாளர்களையும் மேலதிக கவனத்திற்காக அழைபதற்கு முடிவு செய்யப்பட்டது.

- **கருத்தரங்குகளில் பங்குபற்றல்**

- “அனுபவமானது கோட்பாடுகளை விட சத்தமாக பேசுகிறது சம்பந்தமான கருத்தரங்கு”
- “சமமான பிராந்திய அபிவிருத்தி, கிராமிய கடன் வசதிகள் திட்டம் மற்றும் தந்திரோபாயங்கள் ” பற்றிய கலந்துரையாடல்
- “மாகாணங்களுக்கான குறைநிரப்பு பரிந்துரை” குறித்த கூட்டம்
- “மாகாண சபைகள் மற்றும் உள்ளூர்ராட்சி சபைகளின் நிர்வாக விடயங்கள்” பற்றிய கலந்துரையாடல்

- இலங்கையில் பயங்கரவாதத்தை எதிர்ப்பது மற்றும் தேசிய பாதுகாப்பில் அவற்றின் தாக்கம்

**20. ஆணைக்குழு கூட்டங்கள்**

பின்வரும் திகதிகளில் ஆணைக்குழு கூட்டங்கள் நடைபெற்றன

- 26.04.2019
- 25.05.2019
- 15.06.2019

ஒழுங்கு முறையாக ஒவ்வொரு ஆணைக்க்குழு கூட்டத்திற்கும் முன்னதாக ஆணைக்குழுவின் உப குழுக்கள் சந்தித்தன

பிரதான அலுவலர் குழு கூட்டங்கள் வாராந்தம்  நடைபெற்றன.